MR. CHAIRMAN : All the four questions relate to the same subject. Does anybody want to put any supplementary question?

THIRU A. R. DAMODARAN : The Hon. the Chief Minister has not answered the other three questions.

MR. CHAIRMAN : They all relate to the same subject.

*28 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether a number of raffle tickets of other States have been seized in this State in November 1971; and

(b) if so, the reasons thereof?

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) 1971 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் இம் மாநிலத்தில் வெளி மாநிலங்களின் பரிசுச் சீட்டுகள் பல கைப்பற்றப் பட்டனவா?

(இ) ஆமெனில், அதன் காரணங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) தமிழ்நாட்டில், முதலில் பிற மாநிலப் பரிசுச் சீட்டுகள் விற்கப்படுவதற்கு 8—11—71 முதல் அரசு தடை விதித்தது. மேற் சொன்ன ஆணைகளின் விளைவாக பிற மாநிலங்களின் பரிசுச் சீட்டுகள் கைப்பற்றப்பட்டன. இவ்வரசு எந்த மாநிலங்களுடன் பரிசுச்சீட்டு விற்பனைக்காகப் பரிமாற்று ஏற்பாடுகள் செய்து கொண்டுள்ளதோ அந்த மாநிலங்களுக்கு இந்தத் தடை பொருந் தாது என்கிற வகையில் மேற்கூறப்பட்ட ஆணைகள் பின்னர் திருத்தப்பட்டன. பின்னர் பிற மாநிலங்களோடு செய்து கொண்ட ஒப்பந்தங்கள் அனைத்தையும் ரத்துச் செய்து 23—12—71-ல் நிதித் துறை பிற மாநிலங்களின் பரிசுச்சீட்டு விற்பனையைத் தடை செய்து ஆணை பிறப்பித்தது. இவ்வாணையை எதிர்த்து உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ள காரணத்தினால், இந்த ஆணை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.